بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/09/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்களின் ஒளியில் ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

கொஞ்சம் காலத்திற்கு முன்பு பத்ர் போர் தொடர்பாக கூறப்பட்டபோது அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பான நிகழ்வுகளும் கூறப்பட்டு வந்தன. இன்று பத்ர் போர் தொடர்பாகவே சில தொடர்புள்ள சம்பவங்களை எடுத்து வைப்பேன். அவற்றைக் குறித்து வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. அவற்றை அறிவதும் அவசியமாகும். முந்தைய குத்பாக்களில் கூறப்பட்டது போன்று, பத்ர் போர் முடிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்று நாட்கள் பத்ர் போர்க்களத்தில் தங்கியிருந்தார்கள். மூன்றாவது நாள் சவாரிகளில் பல்லக்குகளைக் கட்டுமாறு கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களையும் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களையும் பத்ர் போர் வெற்றியின் நற்செய்தியைக் கூறுவதற்காக பத்ர் போர்க்களத்தில் இருந்தே மதீனாவை நோக்கி பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கி புறப்பட்டார்கள்.

வெற்றி பெற்ற இந்தக் குழுவுடன் மக்கத்து குரைஷியர்களின் 70 கைதிகளும் இருந்தனர். வரலாற்று நூல்களில் எழுதப்பட்டுள்ளதாவது; அந்தக் கைதிகளில் நஸ்ர் பின் ஹாரிஸ் என்பவனும் உக்பா பின் அபீ முஅய்த் என்பவனும் மதீனா செல்லும் வழியிலேயே அவர்களின் கடும் குற்றத்தின் காரணமாக அப்போதைய பொதுவான வழக்கத்திற்கு ஏற்ப கொல்லப்பட்டனர்.

ஆனால் இந்த விஷயத்தில் அனைத்து வரலாற்று ஆசிரியர்களுக்கும் ஒருமித்த கருத்து இல்லை. அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகிறார்கள்: பத்ர் போர்க்களத்தில் இருந்து திரும்பும் போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃப்ரா எனும் இடத்தை அடைந்தபோது நஸ்ர் பின் ஹாரிஸை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கொன்றார்கள். அவனுடைய சகோதரி தன்னுடைய சகோதரனுடைய மரணத்தையடுத்து சில கவிதைகளைக் கூறினாள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்தக் கவிதைகளைப் பற்றி தெரிய வந்தபோது அன்னார் மிகவும் அழுதார்கள். இந்தக் கவிதைகள் நஸ்ருடைய மரணத்திற்கு முன்பு என்னை வந்தடைந்திருந்தால் நான் அவனை மன்னித்திருப்பேன் என்று கூறினார்கள். ஆனால் சில வரலாற்று ஆசிரியர்கள் இதை மறுத்திருக்கிறார்கள். சில வரலாற்று ஆசிரியர்களோ இந்த சம்பவத்தையே மறுத்திருக்கிறார்கள். அல்லாஹ்வே நன்கு அறிவான்!

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் கூறுகிறார்கள்: சில வரலாற்றாசிரியர்கள் கைது செய்யப்பட்ட தலைவர்களுள் உக்பா பின் அபீ முஅய்த் உடைய பெயரையும் எடுத்துரைத்துள்ளார்கள். அவன் கைதியாக இருந்த நிலையில் கொல்லப்பட்டான் என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இது சரியானதன்று! (ஏனெனில்) உக்பா பின் அபீ முஅய்த் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டு விட்டான் என்று ஹதீஸிலும், வரலாற்றிலும் மிகவும் தெளிவாக வந்துள்ளது. எந்த மக்கத்து தலைவர்களின் சடலங்கள் ஒரு குழியில் புதைக்கப்பட்டனவோ அவர்களுள் இவனும் இருந்தான். ஆனால் நஸ்ர் பின் ஹாரிஸ் கைதியாக இருந்த நிலையில் கொல்லப்பட்டதாக பெரும்பாலான அறிவிப்புகளில் இருந்து தெரிய வருகிறது. இவன் கொல்லப்பட்டதற்கு காரணம் என்னவென்றால், மக்காவில் காஃபிர்களின் கைகளால் கொல்லப்பட்ட அப்பாவி முஸ்லிம்களின் கொலைக்கு நேரடி பொறுப்பாளிகளாக இருந்தவர்களில் இவனும் ஒருவன் ஆவான். எவ்வாறிருப்பினும் கைதிகளில் யாராவது கொல்ல கொல்லப்பட்டார்கள் என்றால் அது நஸ்ர் பின் ஹாரிஸ் மட்டுமே ஆவான். இவன் கொலை குற்றத்திற்கு பதிலாக கொல்லப்பட்டான்.

பத்ர் போரில் முஷ்ரிக்களின் பெரும் பெரும் தலைவர்களையும் சேர்த்து 70 காஃபிர்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர். அத்துடன் 70 பேர் கைது செய்யப்பட்டனர். சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு உள்ளது. ‘ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய சஹாபிகள் பத்ர் போர் நாளன்று முஷ்ரிக்களின் 140 நபர்களுக்கு இழப்பை உண்டாக்கினார்கள்.’ அதாவது 70 கைதிகள்; 70 கொல்லப்பட்டவர்கள்.

சஹாபா பெருமக்கள் அந்தக் கைதிகளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். அந்தக் கைதிகளுள் சில பாக்கியசாலிகளும் இருந்தனர். அவர்கள் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் சஹாபிகளின் நல்லொழுக்கங்களால் தாக்கத்திற்குள்ளாகி முஸ்லிம்களாக ஆனார்கள். அவர்களுள் சிலரின் பெயர்களாவது; அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப், அக்கீல் பின் அபீ தாலிப், நவ்ஃபல் பின் ஹாரிஸ், அபுல் ஆஸ் பின் ரபீஃ, அபுல் அஸீஸ், காலித் பின் ஹிஷாம், அபூ வதாஅ பின் ஸஹ்மீ, அப்துல்லாஹ் பின் உபை பின் கலஃப் ஜும்ஹய், வஹப் பின் உமைர், சுஹைல் பின் அம்ர் ஆமிரி ஆகியோர் அனைவரும் தம்முடைய ஃபித்யாவைக் கொடுத்துவிட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

பத்ர் போர் உடன் தொடர்புடைய ஒரு விஷயம் என்னவென்றால், அது ரோமானிய அரசு வெற்றி பெற்ற சம்பவம் ஆகும். ரோமானிய அரசு வெற்றி பெறும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். இதற்கு பத்ர் போருடன் தொடர்புள்ளது. ஆகவே இதை இங்கு கூறுவது பொருத்தமானதாகும். நுபுவத்தின் ஐந்தாம் ஆண்டிலிருந்து சூரா அர் ரூம் இறங்கியது. அதில் ரோமானிய ஆட்சியின் வெற்றி குறித்து முன்னறிவிக்கப்பட்டிருந்தது. அல்லாஹ் அந்த அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களை இறக்கிய போது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மக்காவின் சுற்று வட்டாரத்தில் இந்த வசனங்களை ஓதிக் காட்டியவாறு இவ்வாறு அறிவித்தார்கள்:

الٓمّٓ ۚ غُلِبَتِ الرُّوۡمُ ۙ فِیۡۤ اَدۡنَی الۡاَرۡضِ وَ هُمۡ مِّنۡۢ بَعۡدِ غَلَبِهِمۡ سَیَغۡلِبُوۡنَ ۙ فِیۡ بِضۡعِ سِنِیۡنَ ۬ؕ

“நான் அல்லாஹ். எல்லாம் அறிந்தவன். ரோமானியர்கள் அருகில் உள்ள நாட்டில் வெற்றி கொள்ளப்பட்டனர். மேலும், அவர்கள் 3 லிருந்து 9 வருடத்திற்குள் தங்கள் தோல்விக்குப் பின் நிச்சயம் வெற்றி பெறுவர்.”

சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு உள்ளது. பாரசீகர்களுக்கும் ரோமானியர்களுக்கும் இடையில் போர் ஆரம்பித்தபோது ரோமானியர்களின் வெற்றியை முஸ்லிம்கள்

விரும்பினர். ஏனென்றால் அவர்கள் வேதம் கொடுக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் குரைஷிய காஃபிர்களோ பாரசீகர்களின் வெற்றியை விரும்பினர். ஏனென்றால் அவர்கள் சிலை வணங்கிகளாக இருந்தனர். இந்த விஷயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் அபூஜஹ்லுக்கும் இடையே பந்தயம் ஏற்பட்டது. இதற்காக ஐந்து வருட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘இங்கு بِضْعِ என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது 9 வருடத்தையோ அல்லது 7 வருடத்தையோ குறிக்கும். ஆகவே காலக்கெடுவை அதிகரித்துக் கொள்ளுங்கள்.’ ஆகவே அவ்வாறே நிகழ்ந்தது. ரோமானியர்கள் வெற்றி பெற்றனர். ஷஃபீ என்பவர் கூறுகிறார்: அந்தக் காலத்தில் பந்தயம் வைப்பது ஆகுமானதாக இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த சம்பவங்களைப் பற்றி முன்னறிவித்தார்களோ அவற்றுள் ரோமானியர்களின் மாபெரும் போர் வெற்றியைப் பற்றிய மிகத் தெளிவான பகிரங்கமான முன்னறிவிப்பும் இருந்தது. அரேபியாவின் இரு புறங்களிலும் ரோமானியர்கள் மற்றும் பாரசீகர்களின் அரசாட்சிகள் நிலை பெற்றிருந்தன. இந்த இருவருக்கும் இடையில் நீண்ட காலமாக கடும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. நபித்துவத்தின் ஐந்தாம் வருடமான 614 ஆம் ஆண்டில் இந்த இரு அண்டை அரசுகளுக்கும் இடையே ஒரு கடுமையான குருதி யுத்தம் நடந்தது. அதில் ரோமானிய ஆட்சி முற்றிலும் சிதைந்து விட்டது. எதிர்பார்ப்புக்கு எதிராக போரின் முடிவு வெளிப்பட்டபோது, நிச்சயமாக முஸ்லிம்களுக்கு துக்கமும், காஃபிர்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எங்களுடைய சகோதரர்கள் வெற்றி பெற்றது போல் நீங்கள் எங்களுடன் போர் செய்திருந்தால் நாங்களும் வெற்றி பெற்றிருப்போம் என்று அந்தக் காஃபிர்கள் முஸ்லிம்களை ஏளனம் செய்தனர். அந்த நேரத்தில் ரோமானியர்களின் நிலை எந்த அளவு பரிதாபகரமானதாக இருந்தது என்றால், அவர்களின் கஜானா காலியாக இருந்தது; படை சிதறுண்டு போய் இருந்தது; நாட்டில் கிளர்ச்சிகள் உருவாகி இருந்தன. ரோமானிய பேரரசன் ஹெராகிளியஸ் எல்லா நேரமும் ஆடம்பர பிரியனாகவும், அக்கறை அற்றவனாகவும், சோம்பேறியானவனாகவும், யூகங்களில் மூழ்கி இருப்பவனாகவும் இருந்தான். எதற்கும் தகுதியற்ற அரசனாக அவன் இருந்தான். ரோமானியர்கள் கப்பம் கட்ட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. ஓராயிரம் தங்கம், வெள்ளி, பட்டாடை கட்டுகள் மற்றும் ஓராயிரம் கன்னிப்பெண்களை கப்பமாக கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ரோமானியர்கள் எந்த அளவுக்கு பலவீனமாகி விட்டார்கள் என்றால் அவர்கள் இந்த வெட்கக்கேடான நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு விட்டனர். அதற்குப் பிறகு ரோமானிய அரசின் தூதுவன் ஈரானிய அரசவைக்கு சமாதான கோரிக்கையைக் கொண்டு சென்ற போது ஆணவமிக்க குஸ்ர் எனும் அந்த ஈரானிய அரசன் அவனைப் பார்த்து, எனக்கு இவை தேவை கிடையாது! மாறாக, ஹெர்குலிஸ் சங்கிலியால் பிணைக்கப்பட்டு எனது சிம்மாசனத்தின் கீழ் வேண்டும்; அவன் சூரிய தேவனுக்கு முன்னால் தலை குனிய வேண்டும். அப்பொழுது வரை நான் சமாதானத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டான்.

இதை எழுதக்கூடியவர் எழுதுகிறார்: போர்க்களத்தின் காட்சி இவ்வாறு இருக்கும்போது, அந்தக் கடுமையான யுத்தத்தை விட்டு வெகு தொலைவில் காய்ந்த, தரிசு நிலத்தில், நிசப்தமான மலைகளுக்கு இடையே அமைதியின் பேரரசர் ஒருவர் தோன்றினார். நிகழ்ந்து முடிந்த சம்பவங்களுக்கு முற்றிலும் எதிராக ரோமானிய வெற்றியைக் குறித்த ஒரு முன்னறிவிப்பைக் கூறினார். இந்த முன்னறிவிப்பை மேற்கோள் காட்டி எழுதக்கூடியவர் இவ்வாறு எழுதுகிறார். சம்பவங்களைப் பொருத்தவரை இது நம்ப முடியாததாக உள்ளது. அதாவது வெகு காலத்திற்குப் பிறகு நடக்கக்கூடிய விஷயமாக இது தெரிகிறது! இது நிகழ்ந்து விட்டால், தாம் தோற்று விட்டால் பல ஒட்டகங்களைத்

தருவதாக காஃபிர்கள் முஸ்லிம்களிடம் பந்தயம் கட்டினர். இப்போது முஸ்லிம்கள், காஃபிர்கள் ஆகியோர் இச்சம்பவங்களின் முடிவை நோக்கி பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். இறுதியில் சில வருடங்களுக்குப் பிறகு எதிர்பார்ப்புக்கு எதிராக உலகம் (தலை கீழாக) புரண்டு போய்விட்டது.

'ரோமப் பேரரசின் தேய்வும், வீழ்ச்சியும்' எனும் நூலை எழுதிய மிக புகழ் பெற்ற எழுத்தாளரும், வரலாற்று ஆசிரியருமான எட்வர்ட் ஃகிப்பன் என்பவர் ஹெர்குலிஸ் மன்னனுடைய நிலையை எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்: ரோமப் பேரரசன் தனது வாழ்வின் இறுதியில் இந்தக் காட்சியைத் துணிவற்ற ஓர் ஆண்மகனைப் போன்று கண்டு கொண்டிருந்தான்.

ஹெராகிளியஸிடம் தோன்றிய இந்த திடீர் புரட்சி மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றின் ஒளியில் இந்த வியப்பை ஏற்படுத்தும் மாற்றங்கள் மற்றும் அதனுடைய காரணிகளைக் குறித்து ரோமானிய வரலாற்றாசிரியர்களும், எழுத்தாளர்களும் விளக்கமாக எழுதும்போது வினோதமான பல விஷயங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் எட்வர்ட் ஃகிப்பன் எழுதுகிறார்: "இந்த குருதி யுத்த (கள)த்தை விட்டு வெகு தொலைவில் ரோமானியர்களின் உதவிக்காக ஒரு தீர்க்கதரிசன கரம் நீண்டு கொண்டிருந்தது அவர்களுக்கு என்ன தெரியும்? அவரே இந்தப் புரட்சி மற்றும் மாற்றத்தின் மிகப்பெரும் ஆன்மிக காரணியாக இருந்தார். ரோமானியர்களுக்கும் பாரசீகர்களுக்கும் இடையில் போர் ஆரம்பமானபோது முஷ்ரிக்கள் ஈரானியர்களுக்கு ஆதரவாளர்களாக இருந்தனர். ஏனென்றால் அவர்களும் சிலை வணங்கிகளாக இருந்தனர். முஸ்லிம்கள் ரோமானியர்களுக்கு ஆதரவாளர்களாக இருந்தனர். ஏனென்றால் அவர்கள் வேதம் கொடுக்கப்பட்டவர்களாக இருந்தனர்" என்று அவரே முஸ்தத்ரக் மற்றும் திர்மிஸீ ஆகிய நூல்களின் மேற்கோள்களையும் சுட்டிக் காட்டியுள்ளார். 621 ஆம் ஆண்டில் திடீரென ஹெராகிளியஸ் போர்க்களத்தின் சீசராக மாறிவிட்டான். கல்லாத அரேபிய நபியின் முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் நிறைவேறியது. முஸ்லிம்கள் பத்ர் போரில் காஃபிர்களைத் தோற்கடித்த அதே நேரத்தில் ரோமானியர்கள் ஈரானியர்களைத் தோல்வியுரச் செய்தனர்.

சில இளைஞர்களும், இளமைப் பருவத்தில் அடி எடுத்து வைக்கும் பிள்ளைகளும் எனக்குக் கடிதம் எழுதும் போது, இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்று எவ்வாறு அறிந்து கொள்வது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் உண்மையான நபி என்று எவ்வாறு அறிந்து கொள்வது என்று கேள்விகள் கேட்கின்றனர். இங்குள்ள சுற்றுச்சூழல் அவர்கள் மீது தாக்கம் ஏற்படுத்த ஆரம்பித்து விட்டது. இஸ்லாத்தின் உண்மைத்துவம் பற்றி அவர்களுக்கு சந்தேகம் எழு ஆரம்பித்துவிட்டது. அவர்கள் இந்த வரலாற்றையும், அந்நியர்களின் வாக்குமூலத்தையும், திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகளையும் பார்க்க வேண்டும். பெற்றோர்கள் தாமும் திருக்குர்ஆன் ஓத வேண்டும்; இஸ்லாத்தின் உண்மைக்கு இது எவ்வாறு சான்றாக உள்ளது என்று தம்முடைய பிள்ளைகளுக்கும் இந்த முன்னறிவிப்புகளைக் காட்ட வேண்டும். பெற்றோர்களும், இளைஞர்களும் தம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. கேள்வி கேட்பது மட்டும் போதுமானதன்று. கேள்வி கேட்க வேண்டும் என்றால் சுயமே தம் அறிவை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். நம்முடைய கிளை அமைப்புகளும் இது சம்பந்தமாக அவர்களுக்கு அறிவை வழங்க வேண்டும்.

வரலாற்றுடன் பொருந்தி பார்க்கும்போது 609 ஆம் ஆண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் தோற்றம் நிகழ்ந்தது. 610 ஆம் ஆண்டிலிருந்து ரோம் மற்றும் பாரசீகர்களுக்கு இடையே சச்சரவு ஆரம்பித்தது. 613 ஆம் ஆண்டு போருக்கான அறிவிப்பு செய்யப்பட்டது. 614 ஆம் ஆண்டிலிருந்து ரோமானியர்களின் தோல்வி ஆரம்பித்தது. 616 ஆம் ஆண்டில் ரோமானியர்களின் தோல்வி முழுமையடைந்தது. 622

ஆண்டில் ரோமானியர்கள் மீண்டும் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். **623** ஆம் ஆண்டிலிருந்து அவர்களின் வெற்றி ஆரம்பமானது. **625** ஆம் ஆண்டில் அவர்களின் வெற்றி முழுமையடைந்தது. இந்த வரிசைப்படி பார்க்கும்போது இந்த முன்னறிவிப்பின் சிறப்பம்சம் என்னவென்றால், தோல்வியின் ஆரம்பம் முதல் வெற்றியின் ஆரம்பம் வரை கணக்கிட்டு பார்த்தால் அவை **9** வருடங்களாக உள்ளன. அதேபோன்று தோல்வியின் நிறைவு முதல் வெற்றியின் நிறைவு வரை கணக்கிட்டுப் பார்த்தாலும் அதுவும் **9** வருடங்களாக உள்ளன. இந்த வெற்றி முழுமை அடைந்த பிறகு ஹெராகிளியஸ் முன்னால் இருந்தது போல் மீண்டும் அதே சோம்பேறி மன்னனாகவும், ஆடம்பர பிரியனாகவும் ஆகிப்போனான். இயற்கையின் கை இந்த முன்னறிவிப்பை முழுமைப்படுத்தும் பொருட்டு சில வருடங்களுக்காக மட்டும் அவனது உள்ளத்தையும், மூளையையும் விழிப்பூட்டி அவனது கைகளை சுறுசுறுப்பாகியது போல் தெரிகிறது. முன்னறிவிப்பு நிறைவேறிய பிறகு ஆடம்பரம் மற்றும் கவனமின்மையின் படுக்கையில் அவனை மீண்டும் கிடத்தி விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஈரானியர்கள் முஷ்ரிக்களாக இருந்தார்கள். ஆனால் ரோமானிய பேரரசன் கைஸர் கிறிஸ்தவனாக இருந்தான். ஓரிறைக் கொள்கையுடையவனாக இருந்தான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறை மகனாக அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போதுதான் இந்த வசனம் இறங்கியது. ரோமானியர்கள் அழிந்து போகவிருந்த நிலையில், முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைக்கும் போது ரோமானியர்களுக்கும் வெற்றி கிடைக்கும் என்று இறைவன் அவர்களின் வெற்றியைக் குறித்த முன்னறிவிப்பை செய்தான்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இது எந்த அளவுக்கு வியப்பைத் தரும் மருத்துவமிக்க முன்னறிவிப்பு என்று இப்போது சிந்தித்து பாருங்கள்! எவ்வாறான நேரத்தில் இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டது என்றால், முஸ்லிம்களின் பலவீனமான நிலையோ அபாயத்தில் இருந்தது. அவர்களிடம் எந்தப் பொருட்களும் இல்லை; எந்த ஆற்றலும் இல்லை. இவ்வாறான நிலையில் இவர்கள் வெகு விரைவில் அழிந்து போவார்கள் என்று எதிரிகளும் கூறினர். அதற்காக ஒரு காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டது. பிறகு يَوْمَئِذٍ يَّفْرَحُ الْمُؤْمِنُوْنَ என்று கூறி இரட்டை முன்னறிவிப்பாக அதை ஆக்கினான். அதாவது எந்நாளில் ரோமானியர்கள் பாரசீகர்களை வெற்றி கொள்வார்களோ அதே நாளில் முஸ்லிம்களும் வெற்றி பெற்று மகிழ்ச்சியடைவார்கள் என்று கூறினான். ஆகவே இந்த முன்னறிவிப்பு எவ்வாறு செய்யப்பட்டதோ அதேபோன்று பத்ர் போர் நாளன்று இது நிறைவேறியது. அங்கு ரோமானியர்கள் வெற்றி பெற்றனர்; இங்கு முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது.

இந்த தொடர் இனிமேலும் தொடரும். மீதமுள்ளவற்றை இனிவரும் காலத்தில் எடுத்துரைப்பேன் இன்ஷா அல்லாஹ்!

***ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் UK வைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஃபராஸ் அஹ்மத் அலீ பின் அப்துல் வாஹித் சாஹிப் அவர்களின் நற்குறிப்பு மற்றும் ஜமாஅத் தொண்டுகள் பற்றி எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**